# யாழ்ப்பாணத் தமிழரிடையே வழங்கும் 'சத்தியம் செய்தல்' குறித்த நம்பிக்கை வழக்கம்

கலாநிதி. கிருஷ்ணபிள்ளை விசாகரூபன்


## ஆய்வுச் சுருக்கம்

*நாட்டார் வழக்காற்றியல் கல்விப் புலத்தின் 'அடிப்படைப் பொதுக்கூறு' (Common Denominator) நம்பிக்கையாகும். ஒரு சமூகத்தின் பண்பாட்டு வேர்களை இனங்கண்டு சுட்டத்தக்க தகைமையினைப் பெற்றுள்ள இந்நம்பிக்கைகள் பல்வேறுவகையினவாக வழக்கிலிருந்து வருகின்றன. அவற்றுள் மிகுந்த செல்வாக்குடனிருந்து வரும் 'சத்தியம் செய்தல்' குறித்த நம்பிக்கை வழக்கத்தினைப் பற்றி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.*


### 1. முன்னுரை

ஒருவர் தனது உறுதிப்பாட்டை அல்லது உண்மைத் தன்மையினை நிலைநாட்ட மேற்கொள்ளுகின்ற பல்வேறு வழிமுறைகளில் 'சத்தியம் செய்தல்' என்பது பிரதானமான ஒன்றாக உள்ளது. சத்தியம் செய்து உண்மைத் தன்மையினை நிலை நாட்டும் வழக்கம் உலகின் பல்வேறு இன மக்களிடையேயும் பெருவழக்காகக் காணப்படுகின்றது. [1] ஆங்கில அகராதி மரபில் சத்தியத்தினைக் குறிக்க, `Oath', Promise, Swcaring முதலான பல்வேறு சொல்லாட்சிகள் பயின்று வருகின்றன. இச் சொற்களின் பொருண்மைகளை முறைப்படுத்திப் பார்க்கின்றபோது அவை 'உண்மை', 'பிரமாணம்' முதலான பொருண்மைகளை முனைப்புறுத்தி நிற்பதனைக் காணமுடிகின்றது.

தமிழ் மரபில் சத்தியம் செய்யும் வழக்கம் மற்றும் அது குறித்த நம்பிக்கை என்பது மிக நீண்ட காலமாகவே பயின்று வருவதனை அவதானிக்க முடிகிறது. தமிழின் தொன்மையான இலக்கியங்களில் சத்தியத்தைக் குறிப்பதாகச் 'சூள்' என்ற சொல் பல இடங்களிலும் பயின்று வந்துள்ளது. [2] இவ்விலக்கியங்களின் வாயிலாகச் சத்தியத்தின் தொன்மையினை யும் அதன் தன்மைகளையும் விளங்கிக் கொள்ள முடிகிறது. பண்டைத் தமிழரிடையே தெய்வத்தைக் காட்டியோ , ஒருவரது மெய் யைத் தீண்டியோ, தீமீதோ, 'சூள்' அல்லது 'வஞ்சினம்' கூறும் வழக்கம் தொன்று தொட்டே இருந்து வந்துள்ளது. அதன் தொடர்ச்சியினையும் வளர்ச்சியினையும் இன்றுவரை தமிழ்ச் சமுதாயத்தில் கண்டுகொள்ள முடிகிறது.

இக்கட்டுரையானது வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் ஆகிய பெரும்பாகப் பிரிவுகளில் உள்ள பதினான்கு பிரதேச செயலர் மற்றும் உதவிப் பிரதேச செயலர் பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வுத் தரவுகளின் வழியே யாழ்ப்பாணத்து இந்து சமயம் சார்ந்த மக்களிடையே வழக்கில் இருந்து வரும் சத்தியம் செய்தல் குறித்த நம்பிக்கை வழக்கத்தினைச் சமூகவியல் நோக்கில் விளக்கி உரைப்பதாக அமைகிறது.

## 2. சத்தியம் குறித்த நம்பிக்கை வழக்கத்தின் செல்வாக்கு

ஆய்வுப் பிரதேச மக்களுடைய அன்றாட வாழ்வியல் நடைமுறைகளிலே சத்தியம் செய்யும் வழக்கம் மிகுந்த செல்வாக்கினைச் செலுத்துகின்ற ஒரு வழக்கமாகப் பயில் நிலையில் இருப்பதனைக் காணமுடிகின்றது. படித்தவர், ஓரளவு படித்தவர், பாமரர் என்ற கல்விநிலை வேறுபாட்டு எல்லைகளைத் தாண்டி, சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும் சத்தியத்தின் ஊடுருவலைக் காணமுடிகின்றது. Promise' 'God Promise' முதலான சொல்லாட்சிகளைப் படித்தவர்கள் பல்வேறு சூழ்நிலைகளிலும்பரவலாகப் பயன்படுத்துவதனைக் காண முடிகின்றது. சமூக ஒழுங்கு, சமூகக் கட்டுக் கோப்பு, தனிநபர்ஒழுகலாறுகள் முதலானவற்றை நெறிப்படுத்துவதில் சத்தியத்தின் பங்கு கணிசமானதாகும். நாட்டுப்புற மக்களின் மனச்சாட்சியின் வெளிப்பாடாகச் சத்தியத்தினைக் குறிப்பிடலாம்.

## 3. சத்தியத்தின் வகைப்பாடு

கள ஆய்வுத் தரவுகளை முறைப்படுத்திப் பார்க்கின்றபோது ஆய்வுப் பிரதேச மக்களிடையே வழங்கும் சத்தியம் குறித்த நம்பிக்கை வழக்கத்தினைப் பின்வருமாறு வகைப்படுத்த முடிகிறது. அவையாவன,

1. கடவுளர் மேல் சத்தியம் செய்தல்
2. தன்மேலேயே சத்தியம் செய்தல்
3. தலையிலடித்துச் சத்தியம் செய்தல்
4. கையிலடித்துச் சத்தியம் செய்தல்
5. தொழில் உபகரணங்களின் மேல் சத்தியம் செய்தல்
6. விருப்புக்குரியவர் மேல் சத்தியம் செய்தல்
7. துண்டைப்போட்டுச் சத்தியம் செய்தல்
8. அன்னத்தின்மேல் சத்தியம் செய்தல்
9. பிள்ளையைக் கடந்து சத்தியம் செய்தல்
10. கற்பூரத்தை அணைத்துச் சத்தியம் செய்தல்
11. தண்ணீர்மேல் சத்தியம் செய்தல்
12. வெற்றிலையின்மேல் சத்தியம் செய்தல்
13. கல்விமேல் சத்தியம் செய்தல்

### *3.1. கடவுளர் மேல் சத்தியம் செய்தல்*

நாட்டுப்புற வழக்கில் கடவுளர் மேல் சத்தியம் செய்தல் என்பது மிகுந்த வினைத்திறன்கூடிய ஒன்றாகவே இன்றும் இருந்து வருகின்றது. கடவுளை முன்னிறுத்திச் சத்தியம் செய்வோர், தாம் செய்த சத்தியத்திற்கு மாறாக நடந்தாலோ, பொய்ச்சத்தியம் செய்தாலோ குறித்த தெய்வம் அவர்களை வருத்தும் என்பது ஆட்சி பெற்ற நம்பிக்கையாக உள்ளது[3]. இதனால் கடவுளரை முன்னிறுத்திச் சத்தியம் செய்வோர் மிகுந்த பயபக்தியோடு எச்சரிக்கையாக நடப்பதனைக் காணக்கூடியதாக உள்ளது. கடவுளரை முன்னிறுத்திச் செய்யப்படும் சத்தியங்களில் பெரும்பாலும் உண்மைத் தன்மைகள் பாதுகாக்கப்படுகின்றன எனக் கூறலாம்.

கடவுளர் குறித்த சத்தியங்களில் ஆகம மரபுகளுக்கூடாக வரும் கடவுளரைக் காட்டிலும், சிறு தெய்வ மரபுகளுக்கூடாக வரும் தெய்வங்களை முன்னிறுத்திச் சத்தியம் செய்வதே 'சத்தியம்' தொடர்பான அதி உச்சப் பாதுகாப்பை வழங்கக் கூடியதாகக் கருதப் படுகின்றது.[4] கடவுளர்களுக்கும் அடியவர்களுக்குமான ' இடைவெளி', 'பக்தி அனுபவம்', தெய்வங்களுக்குக் கற்பிக்கப்படுகின்ற மிதவாத, தீவிரவாதத் தன்மைகள் முதலான விடயங்கள் மேற்படி விடயத்தில் செல்வாக்குச் செலுத்தி வருகின்றன. வைரவர், பிடாரி, முனி, காளி, வீரபத்திரர், துர்க்கா முதலான சிறுதெய்வக் கடவுளர் இவ்விடத்தில் முதன்மை பெறுகின்றனர். இவ்வாறு சத்தியம் செய்யும் போது குறித்த கடவுளரின் பெயரை உச்சரித்தே சத்தியம் செய்வர்.

'அம்மாளாச்சி பாம்பா வருவா'
'வைரவர் கழுத்தைத் திருகிப்போடுவார்'
'முனியப்பர் குடலை உருவி எடுப்பார்'
'காளியாச்சி சும்மா விடா'

முதலான சொற்றொடர்களைச் சத்தியம் வாங்கும் முன்பாக உச்சரித்துச் சத்தியத்தின் வலிமைப்பாட்டைச் சத்தியம் செய்வோருக்கு உணர்த்தும் மரபும் காணப்படுகின்றது.

சிறு தெய்வங்களைத் தவிர ஆய்வுப் பிரதேசங்களிலே செல்வாக்குடன் விளங்குகின்ற தத்தமது குலதெய்வங்களை முன்னிறுத்தியும் பரவலாகச் சத்தியம் செய்யப்படுகின்றன. தீவுப்பிரதேச மக்களிற் பலர் நயினாதீவு நாகபூசணி, எழுவைதீவு ஐயனார், புங்குடுதீவு கண்ணகை முதலான கடவுளர் மீதும், வலிகாமத்து மக்கள், தெல்லிப்பழைத் துர்க்கை, நல்லூர் முருகன் முதலான தெய்வங்கள் மீதும், வடமராட்சி மக்கள் செல்வச்சந்நிதி முருகன், வல்லிபுர ஆழ்வார், வல்லை முனியப்பர் மீதும் சத்தியம் செய்வதனைப் பெருவழக்காகக் கொண்டுள்ளனர். குறித்த பிரதேசங்களைச் சேர்ந்த மக்களால் நன்கு அறியப்பட்ட இக்கடவுளரின் மேல் இப்பிரதேச மக்கள் மிகுந்த நம்பிக்கையினை வைத்துள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். ஆய்வுப் பிரதேசங்களுக்கு அப்பாலுள்ள கடவுளர் சிலர் மீதும் சத்தியங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. மடுமாதா, கதிர்காம முருகன், கோணேசர், திருக்கேதீஸ்வரநாதர், முனீஸ்வரநாதர் முதலான கடவுளர்கள் இது விடயத்தில் முக்கியத்துவம் பெறுகின்றனர். [5]

### *3.2. தன்மேல் சத்தியம் செய்தல்*

தனது உறுதியை நிலை நாட்ட முனைகின்ற ஒருவர், தன்னை முன்னிறுத்திச் செய்வதான சத்தியம் இதுவாகும். குறித்த சத்தியம் பிழைத்தால் அது தன்னை நிச்சயம் வருத்தும் என்ற 'தெளிவு' இவ்வாறு சத்தியம் செய்பவருக்கு இருக்கும்.[6] இவ்வாறு சத்தியம் செய்வதற்கு குறித்த நபரின்மேல் பிற தரப்பினர் நம்பிக்கை கொண்டவர்களாக இருத்தல் அவசியமாகும்.

'என்னாண'
'என்னாணை'
'என்னைக் கொண்டு சத்தியம் செய்யிறன்'
'என்மீது சத்தியம்' [7]

முதலான சொற்றொடர்களைத் தன்மேல் சத்தியம் செய்வதான நடைமுறையில் பயன்படுத்துவதனைக் காணக் கூடியதாக உள்ளது.

### *3.3. தலையிலடித்துச் சத்தியம் செய்தல்*

ஒருவர் தனது தலையின்மீதோ, பிறருடைய தலையின் மீதோ தனது கைகளால் தொட்டுச் சத்தியம் செய்வது இம்முறையாகும்.[8] பிறருடைய தலையைத் தொட்டுச் சத்தியம் செய்யும்போது குறித்த நபர் மீது தனக்குள்ள நெருக்கத்தினையும் ஈடுபாட்டினையும் சத்தியம் செய்யும் நபர் காட்டிக் கொள்வார். தவறான எந்த ஒரு சத்தியமும் தனக்கோ அல்லது தனது அன்புக்குப் பாத்திரமானவருக்கோ தீங்கினை விளைவிக்கும் என்பததைச் சத்தியம் செய்யும் நபர் நன்குஅறிந்து வைத்திருப்பார்.

### *3.4. கையிலடித்துச் சத்தியம் செய்தல்*

சத்தியம் செய்யும்போது, சத்தியம் செய்து கொடுக்க வேண்டிய நபருடைய உள்ளங்கையில் தனது கையை அடித்து அல்லது பொருத்திச் சத்தியம் செய்யும் நடைமுறை இதுவாகும். இவ்வாறு சத்தியம் செய்யும் வேளைகளில் சத்தியத்தினைப் பெறுபவர் தனது கையினை நீட்டுதலும் சத்தியம் செய்து கொடுப்பவர் தனது கையைச் சத்தியம் வாங்கும் நபருடைய கைமீது கவித்தலும் பெரும்பான்மை மரபாக உள்ளது.[9]

கையிலடித்துச் சத்தியம் செய்யும் போது சத்திய மொழிகள் (வஞ்சின மொழிகள்) சிலவற்றை உச்சரித்துக் கையிலடிப்பர். ஆயினும் 'சத்தியமா' என்ற சொல்லைக் கூறிக் கையிலடிப்பதே பெரும்பான்மை வழக்காக உள்ளது.

### *3.5. தொழில் உபகரணங்களின் மேல் சத்தியம் செய்தல்*

தனது உறுதியை நிலைநாட்டிக் கொள்ள விரும்பும் ஒருவர், தனது வாழ்வுக்கு ஆதாரமாக மேற்கொண்டு வரும் தொழிலோடு தொடர்புடைய உபகரணங்கள் மீது ஆணையிட்டுச் சத்தியம் செய்யும் நடைமுறை இதுவாகும். தொழில் உபகரணங்களின் மேல் சத்தியம் செய்வது என்பது பாரதூரமான ஒரு விடயமாகவே கருதப்படுகிறது.[10] தொழில் என்பது ஒருவருடைய வாழ்க்கையில் மிகவும் முக்கியத்துவமான ஒன்றாகும். அவ்வாறான தொழிலோடு தொடர்புடைய உபகரணம் மீதே சத்தியம் செய்வது என்பது சத்தியத்தை வேண்டி நிற்கும் தரப்பாரின் நம்பகத்தன் மையை எளிதில் பெறக்கூடிய ஒன்றாகக் காணப்படுகின்றது.

மீனவர்கள் தாம் கடல்மேற் செல்லும் படகின் மீதும், கள்ளு இறக்குவோர் தாம் மரம் ஏறப்பயன்படுத்தும் 'தளைநார்' மீதும், விவசாயிகள் தாம் உழுவதற்குப் பயன்படுத்தும் 'ஏர்' மீதும், வாகனம் வைத்துத் தொழில் செய்வோர் தமது வாகனங்கள் மீதும், (மோட்டார் வாகனங்கள், மாட்டு வண்டிகள்) கற்பித்தற் தொழிலில் ஈடுபட்டுள்ளோர் தமது நூல்கள் மீதும் சத்தியம் செய்து கொடுப்பதனை வகைமாதிரியான எடுத்துக்காட்டுக்களாக இவ்விடத்தில் குறிப்பிடலாம்.[11] இவ்வாறான சத்தியத்தில் 'பணயம்' வைக்கும் கருவிகளின் முக்கியத்துவம் ஒன்றே இச்சக்தியின் வலிமையினை உணர்த்தப் போதுமானதாகும்.

### *3.6. விருப்புக்குரியவரின்மேல் சத்தியம் செய்தல்*

சத்தியம் செய்யும்போது சத்தியம் செய்து கொடுப்பவர், தாம் அதிகமாக நேசிக்கும் உறவுக்குரியோரை முன்னிறுத்திச் சத்தியம் செய்வது இதுவாகும். தந்தை, தாய், சகோதரர்கள், பிள்ளைகள் என இவ்வாறான உறவுக்குரியோர் பலவகைப்படுவர். ஆயினும் தாயின்மீது சத்தியம் செய்வதே பெரும்பான்மை வழக்கமாக உள்ளது.[12] தாய்க்கும் பிள்ளைக்குமிடையேயான உறவு என்பது மிகவும் புனிதமான ஒன்றாகவே இருந்து வருகிறது. பிள்ளைகளைப் பொறுத்த வரை குடும்பத்தில் உள்ள எவருடன் முரண்பட்டுக்கொண்டாலும் தாயுடன் முரண்படுவதென்பது அரிதாகவே காணப்படுகின்றது. குடும்ப இணைப்பின் சின்னமாகத் தாய் விளங்குகின்றாள். தாய் இல்லாத குடும்பங்கள் பலவும் சின்னாபின்ன மாகிப் போயுள்ளதனைப் பார்க்க முடிகிறது. 'தகப்பன் இல்லாவிட்டாலும் பரவாயில்லை, தாய் இருக்க வேணும்' என்ற மரபுத் தொடர் பரவலாகப் புழக்கத்தில் உள்ளது. இவ்வாறான முக்கியத்துவம் கொண்ட தாய் மீது சத்தியம் செய்வது என்பது மிகுந்த நம்பிக்கைக்குரிய ஒன்றாகக் காணப்படு கின்றது.

**'அம்மாவாண'**
**'பெத்த தாயாணை'**
**'என்னப்பெத்த தாயாணை'**
**'என்ர அம்மாவாணை'**
**'என்ர ஆத்தையாணை'**
**'தாயைக் கொண்டு சத்தியம் செய்யிறன்.'**
**'கோத்தையாணை'**
**கொம்மாவாணை'** [13]

முதலான சொற்றொடர்கள் பலவும் தாயோடு தொடர்புடைய சத்தியத்தில் பயன்பாட்டில் இருந்து வருகின்றமை குடிறிப்பிடத்தக்கதாகும். சிறுபான்மையாகச்

சிலர் தமது பிள்ளைகள் மீதும் சத்தியம் செய்து கொள்கின்றனர். ஆயினும் பிள்ளைகளைப் பணயமாக வைத்துச் சத்தியம் செய்வதனை ஏற்காத மனநிலையிலேயே பெரும்பாலான மக்கள் உள்ளதனைப் பார்க்க முடிகின்றது.

### 3.7. துண்டைப் போட்டுச் சத்தியம் செய்தல்

சத்தியம் வேண்டி நிற்போரின் நம்பிக்கையினைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டுத் தமது உடலிலுள்ள துண்டு ஒன்றினை நிலத்தில் போட்டுத் தாண்டிச் சத்தியம் செய்வது இம்முறையாகும். ஆண்கள் தமது தோளில் உள்ள துண்டையோ அல்லது வேட்டியையோ நிலத்தில் போட்டுச் சத்தியம் செய்வதனை வழக்கமாகக் கொண்டுள்ளனர். பெண்கள் தமது சேலைத் தலைப்பை (முந்தானை) நிலத்தில் போட்டுத் தாண்டிச் சத்தியம் செய்தல் வழக்கமாக உள்ளது.[14]

சத்தியத்துக்கு மாறாக நடப்பின் குறித்த துண்டுக்குரியவரின் உயிருக்கு ஆபத்து நேரும் என்பது நம்பிக்கையாக உள்ளது. இவ்வாறான சத்திய நடைமுறைகளில் தோளில் உள்ள துண்டைப் போட்டுத் தாண்டிச் சத்தியம் செய்தலே பெருவழக்காக உள்ளது. இக்கட்டான சூழ்நிலைகளில் தோளில் உள்ள துண்டைப் போட்டுத் தாண்டுதல் செய்வது பிற ஆடைகளைக் களைவதை விட வசதியான தாகவும் இருந்திருக்கலாம்.

ஒருவருடைய உடலோடு உறவு கொண்டுள்ள பொருட்களைப் பிரித்தாலும் உடலுக்கும் அப்பொருட்களுக்குமுள்ள உறவைப்பிரிக்க முடியாது என்ற நம்பிக்கையே இப்பணயப் பொருளின் அடிப்படையாக உள்ளது. செய்வினை சூனியங்களிலும் ஒருவரது ஆடைகளைப் பயன்படுத்துவது இவ்விடத்தில் கருதத்தக்கதாகும். இந்த நம்பிக்கையின் காரணமாகக் குறித்த சில ஆடைகளைப் பிறர் கண்ணில் படாமல் பாதுகாக்கும் வழக்கம் இன்றும் தொடர்கின்றது.[15] இவ்வாறான ஒரு நம்பிக்கை மேலை நாட்டு மக்களிடையேயும் வழக்கில் உள்ளமை குறித்துப் பிரேசர் விரிவாகக் குறிப்பிட்டுள்ளார். [16]

### 3.8. அன்னத்தின்மேல் சத்தியம் செய்தல்

சத்தியம் செய்யும் நபர் தாம் உட்கொள்ளும் உணவைக் கொண்டு சத்தியம் செய்தல் இதுவாகும். கையில் எந்தவகையான உணவுப் பொருட்கள் இருந்தாலும் அவற்றையெல்லாம் 'அன்னம்' என்றே குறிப்பிட்டுச் சத்தியம் செய்வர். அன்னத்தின் மேல் சத்தியம் செய்வதும் பாரதூரமான ஒன்றாகவே ஆய்வுப்பிரதேச மக்களால் கருதப்படுகின்றது. சத்தியம் பொய்ப்பின் 'அன்னம் தண்ணிக்கு' வழியிராது என்பது நம்பிக்கையாக உள்ளது.

**'அன்னத்தின் அறிய'**
**'சோத்துமீது சத்தியம்'**
**'அன்னத்தினாண'**
**'அன்னம் மீது சத்தியமா'**
**'சோத்தவிள் மீது சத்தியமா'**
**'அன்னம் தண்ணியில்லாமல் சாவன்'**[17]

முதலான சொற்றொடர்களை இவ்வகையான சத்தியத்தின் போது பரவலாகப் பயன்படுத்துவதனைப் பார்க்க முடிகிறது.

### 3.9 பிள்ளையைக் கடந்து சத்தியம் செய்தல்

சத்தியம் செய்வதான நடைமுறைகளில் அதி உச்சமான ஒரு நடைமுறையாகப் பிள்ளையைக் கடந்து சத்தியம் செய்வதனைக் குறிப்பிடலாம். சத்தியத்தின் வலிமையினையும் இது உணர்த்தி நிற்கிறது. சத்தியத்திற்கெனத் தேர்ந்தெடுத்த பிள்ளையினை நிலத்தில்

கிடத்திய பின், சத்தியம் செய்பவர் குறித்த குழந்தையினைத் தாண்டுதல் செய்வதன் மூலம் இச்சத்தியத்தினை நிறைவேற்றுவார்.

பிள்ளையைக் கடந்து சத்தியம் செய்கின்ற நம்பிக்கை வழக்கத்தினைப் பிற சத்திய நடைமுறைகள் எவையும் பயன்தர மாட்டாது எனக் கருதுகின்ற மிகவும் அரிதான சந்தர்ப்பங்களிலேயே ஆய்வுப் பிரதேச மக்கள் தேர்ந்தெடுப்பதனைக் காணக்கூடியதாக உள்ளது.[18]

சத்தியத்திற்கு மாறாக நடப்பின் குறித்த குழந்தையின் உயிருக்கு ஆபத்து நேரும் என்பது இச்சத்தியத்தின் அடிப்படையாக உள்ளது. இதனால் இவ்வாறான சத்தியத்தினை ஏற்க முடியாதமனநிலையிலேயே ஆய்வுப் பிரதேச மக்களிற் பலரும் காணப்படுகின்றனர்.

ஆய்வுப் பிரதேசங்களில், பிறரைப் பெரிதும் நம்பவைக்கக் கூடியதான இச்சத்திய நடைமுறையினைச் சிலர் துஷ்பிரயோகம் செய்துள்ளமையினையும் காணமுடிகிறது. குறித்தஒரு பிரச்சினையில் (காதல், மனைவிக்குப் புறம்பான தாம்பத்திய உறவு.....) எழக்கூடிய உடனடியான எதிர்ப்பலைகளை அதிரடியாகத் தணிக்கும் வல்லமை இச்சத்தியத்திற்குண்டு எனப் பலரும் நம்புகின்றனர். இதுவே சிலரைப் பொய்ச்சத்தியம் செய்வதுவரை கொண்டு சென்றுள்ளதனையும் பார்க்க முடிகிறது.

இவ்வாறு பொய்ச்சத்தியம் செய்வோருக்குக் குறித்த சத்திய நடைமுறையில் நம்பிக்கை இன்மை இருப்பதனாலேயே அதனைத் துணிந்து செய்ய முற்பட்டுள்ளமையினையும் பார்க்க முடிகின்றது. இல்லாவிடின் தமது நேசிப்புக்குரிய குழந்தைகளைத் தாண்டி அவர்களின் உயிரோடு விளையாட இவர்கள் துணியமாட்டார்கள் என்றே கருத வேண்டும். சூழ்நிலையின் இறுக்கத்தைத் தணிக்க கடவுளை வேண்டிக்கொண்டு பிள்ளையினைக் கடந்து விடுகிறார்கள்.[19]

பிற சத்தியங்களில் பொய்த்தவர் களை விடவும், பிள்ளையைத் தாண்டிப் பொய்ச்சத்தியம் செய்தவரைக் குறித்த சமூகத்தில் உள்ளோர் பெரிதும் மதிக்காத நிலையே காணப்படுகிறது. வாழ்நாள் முழுமையும் இது தொடர்பான வசை மொழிகளை இவர்கள் கேட்க வேண்டி ஏற்படுகிறது.[20]

**'பிள்ளையைத் தாண்டிய தேவடியாளெல்லே'**
**'பிள்ளையைக் கடந்த வேசை'**
**'பிள்ளையையே தாண்டிப்பேய்க் காட்டியவன்'**
**'பிள்ளையைப் பணயம் வைச்சபாவி'**

முதலான சொற்றொடர்களை இவ்விடத்தில் வகைமாதிரிகளாகச் சுட்டலாம்.

### *3.10 கற்பூரத்தை அணைத்துச் சத்தியம் செய்தல்*

தெய்வ சந்நிதிகளிலோ அல்லது பிற இடங்களிலோ சிலர் முன்நிலையில் கற்பூரத்தை ஏற்றி அதனைக் கையால் அணைத்துச் சத்தியம் செய்தல் இதுவாகும்.

கற்பூரத்தின் மேல் சத்தியம் செய்வதான நடைமுறை மிகப் பரவலான ஒன்றாகக் காணப்படுகின்றது. சத்தியத்தினை வேண்டி நிற்போர் கற்பூரத்தை ஏற்றுவதும், சத்தியம் செய்பவர் அக்கற்பூர தீபத்தைத் தமது கையால் அணைத்துச் சத்தியம் செய்வதும் மரபாக உள்ளது. சிலர் முன்னிலையில் இச்சத்தியத்தினை நிகழ்த்த வேண்டுவது பெரும்பான்மை வழக்கமாக உள்ளது. பிள்ளைகளிடமோ அல்லது குடும்பத்தின் பிற உறுப்பினர்களிடமோ சத்தியம் வாங்க

முனைவோர் தமது வீட்டில் உள்ள சுவாமி அறையில் உள்ள சுவாமிப்படங்களின் முன்பாகக் கற்பூரத்தை அணைக்க வேண்டுகின்றார். இவ்வுறவுமுறைகளில் வராத பிறரிடம் இச்சத்தியத்தை வேண்டும் சூழ்நிலைகளில் தெய்வ சந்நிதிகளிலேயே அதனைப் பெற்றுக் கொள்வதனைப் பார்க்கமுடிகின்றது.[21]

இச் சத்திய நடைமுறை கடவுளருடன் தொடர்புடையதாக இருந்தாலும் கூட, கடவுளரைத் தொடர்புபடுத்தாது வெறுமனே கற்பூரத்தை அணைத்துச் சத்தியம் செய்வதனையும் பார்க்க முடிகின்றது.

### *3.11 தண்ணீர் மேல் சத்தியம் செய்தல்*

தண்ணீரைப் புனிதமானதாக, தெய்வத்தன்மையுடையதாகக் கருதும் வழக்கம் தமிழரிடையே தொன்றுதொட்டே நிலவி வருகிறது. 'தாயைப் பழித்தாலும் தண்ணீரைப் பழிக்கக் கூடாது' என்பது தமிழரிடையே மிகப்பரவலாக வழங்குகின்ற பழமொழியாக உள்ளது.[22] இவ்வாறான பண்புகள் கொண்ட தண்ணீர் மீது ஆணையிட்டுச் சத்தியம் செய்து கொள்வதே இந்நடைமுறையாகும்.

நீர் நிலைகளின் அருகில் சென்றோ, கொள்கலன்களில் நீரை ஏந்தியோ இச்சத்தியத்தினை நிறைவேற்றுவது மரபாக உள்ளது. நீர்நிலைகளில் கடவுளர் உறைவதான நம்பிக்கை இன்றுவரை தமிழரிடையே வழக்கில் உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

### *3.12 தாலியின் மேல் சத்தியம் செய்தல்*

தாலியைப் பணயமாக வைத்துச் சத்தியம் செய்யும் நடைமுறை இதுவாகும். இச்சத்தியமும் மிகவும் வலுவுள்ள ஒரு சத்தியமாகவே வழக்கில் இருந்து வருகிறது. இச்சத்தியத்தினைப் பெண்கள் மேற்கொள்வதே வழக்கமாக உள்ளது. 'தாலி' என்பதனுள் கணவனது உயிர் அடங்கியுள்ளது என்பதனைச் சத்தியம் செய்வோரும் அதனை வாங்குவோரும் நன்கு உணர்ந்தே இருக்கின்றனர். தாலியுடன் குங்குமத்தையும் இணைத்துச் சத்தியம் செய்யும் நடைமுறையும் வழக்கில் உள்ளது.[23] தாலி, குங்குமம், மஞ்சள் முதலான மங்கலப் பொருட்கள் கணவனது உயிரின் குறியீடுகளாகப் பணயம் வைக்கப்படுகின்றன. பிற சத்தியங்களால் பிறரை நம்பவைக்க முடியாத சூழ்நிலைகளிலேயே தாலி மீதான சத்தியம் செய்யப்படுவதனைப் பார்க்கமுடிகிறது.

### *3.13 வெற்றிலையின் மேல் சத்தியம் செய்தல்*

மாசுமறுவற்ற முழுமையான வெற்றிலை ஒன்றின் மீது சத்தியம் செய்பவர் தனது வலது கையைக் கவித்துச் சத்தியம் செய்தல் இதுவாகும். வெற்றிலைக் கொடியை மிகவும் புனிதமான ஒன்றாகக் கருதும் வழக்கம் தமிழரிடையே இன்றும் நிலவி வருகின்றது. 'வெற்றிலைக் கொடி குற்றம் பொறுக்காது' என்ற நம்பிக்கை இன்றும் வலுவுடன் உள்ளது. இத்தன்மை காரணமாக மாதவிலக்குத்தீட்டு மற்றும் பிற தீட்டுக்களால் பாதிக்கப்பட்டுள்ளோர் வெற்றிலைக் கொடிக்கு அருகில் செல்வதையோ, அதனைத் தீண்டுவதையோ சமூகம் அனுமதிப்பதில்லை. சுத்தமான நீரையே வெற்றிலைக் கொடிக்குப் பாய்ச்சும் வழக்கமும் காணப்படுகிறது. இவ்வாறான புனிதத்தன்மை மற்றும் குற்றம் பொறுக்காத தன்மை கொண்ட வெற்றிலையின் மீது ஒருவர் பொய்ச்சத்தியம் செய்வது என்பது அசாதாரணமான ஒரு விடயமாகவே ஆய்வுப்பிரதேசத்தில் கருதப்படுகிறது.[24]

### *3.14 கல்வி மேல் சத்தியம் செய்தல்*

சத்தியம் செய்து கொடுக்கவேண்டிய சூழ்நிலையில் உள்ள ஒருவர், தாம் கற்ற அல்லது கற்றுக்கொண்டிருக்கின்ற கல்வி மீது ஆணையிட்டுச் சத்தியம் செய்வது இதுவாகும். பெரும்பாலும் பாடசாலைகளில் கல்விகற்றுக் கொண்டிருக்கிற பிள்ளை களிடையே இவ்வாறான சத்தியம் செய்தல் நடைமுறை அதிகமாக வழக்கில் உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். 'பென்சில்', 'பேனா', 'அழிறப்பர்', 'கட்டர்', 'கொப்பி' முதலான தமது எழுது பொருட்களைப் பறிகொடுத்த பள்ளிச் சிறார்கள், தாம் சந்தேகப்படும் சகாக்களிடம் 'கல்வி'யைக் கொண்டு சத்தியம் செய்யக் கேட்பதனை வழக்கமாகக் கொண்டுள்ளனர். இவ்வாறான வேளைகளில் சத்தியம் செய்து கொடுப்போர்.

**'நான் படிக்கிற கல்வியாண'**

**'கல்வியாண'**

**'என்ர கல்வியைக் கொண்டு சத்தியஞ் செய்யிறன்'**

**'கல்வியாண'**

**'எட்டுக் கல்வியாண'**

**'இந்தப் படிப்பாண'**[25]

முதலான சொற்றொடர்களை உச்சரித்துக் கொண்டும் குறித்த பாடப் புத்தகங்களைத் தொட்டுக் கொண்டும், சத்தியம் செய்வதனைப் பார்க்க முடிகின்றது. பாடசாலைச் சிறாரிடையே வழக்கில் உள்ள இச்சத்திய நடைமுறை, அவர்களிடையேயான சிறுசிறு பிணக்குகளைத் தீர்ப்பதில் கணிசமான பங்கை ஆற்றி வருகிறது.

கல்விப் பொதுத் தராதரப் பாடத் திட்டத்தில் எட்டுப் பாடங்கள் உள்ளடக்கப் பட்டிருந்த காலப்பகுதியில் எட்டுப் பாடக் கல்வியைக் கொண்டு சத்தியம் செய்யும் நடைமுறை வழக்கில் வந்திருக்க வேண்டும். 'ஏட்டுப்பாடக் கல்வியா, எட்டுப்பாடக் கல்வியா' என்பதில் பாடவேறுபாட்டுக் (Text veriation) குழப்பமும் காணப்படுகிறது.[26]

கல்வியைக் கொண்டு சத்தியம் செய்யும் போது சத்தியம் செய்யும் நபருக்கு 'ஓடாத' (கை வராத) பாடத்தின் மீது நெத்தியடியாகச் சத்தியம் கேட்கும் விசித்திரமான ஒரு வழக்கமும் காணப்படுகிறது.

**'விஞ்ஞானத்தைக் கொண்டு சத்தியம் பண்ணு'**

**'கணக்கைக் கொண்டு சத்தியம் செய்'**

**'ஆங்கிலக் கல்வியைக் கொண்டு சத்தியம் செய்'**

முதலான சொற்றொடர்களை இவ்வாறான சத்திய நடைமுறையில் கேட்க முடிகிறது. விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் முதலான பாடங்கள் இன்றும் பல்வேறு மாணவர்களுக்கும் ஒரு 'சிம்ம சொப்பனமாகவே' இருந்து வருகின்றன. ஏலவே பாடங்களில் குறைவான புள்ளிகளைப் பெறும் மாணவர்களிடம் அதே பாடங்களிலேயே சத்தியத்தினைக் கேட்பது அவர்களை உளவியல் ரீதியாகப் பெரிதும் பாதிக்கிறது. எங்கே பொய்ச்சத்தியம் செய்தால் மேலும் இடர்ப்படுவோமோ என்ற நினைப்பில் இவர்கள் உண்மையான சத்தியத்தையே செய்ய முன்வருகின்றமையினைக் காணமுடிகிறது.

கல்வியை மூலதனமாகக் கொண்டு தொழிலாற்றி வருவோரும் தமது கல்வியைக் கொண்டு சத்தியம் செய்வதனை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

### 4. சத்தியத்தினை விலக்கிக் கொள்ளுதல்

தமது உறுதியை நிலைநாட்டும் பொருட்டு ஏதாவது ஒருவழி முறையில் சத்தியம் செய்யும் ஒருவர், அச்சத்தியத்தின் பாரதூரமான தன்மையினை உணர்கின்ற நிலையிலோ

அல்லது குறித்த சத்தியத்தின் விளைவை உணர்ந்த பிறரது வற்புறுத்தல் நிலையிலோ சத்தியத்தினை உடனடியாகவே மீளப்பெற்றுக் கொள்வதுமுண்டு. இவ்வாறான மீளப்பெறல் நடவடிக்கையினை 'ஆணை விடுதல்' என்ற சொற்றொடரால் ஆய்வுப் பிரதேச மக்கள் குறிப்பதனைக் காணமுடிகின்றது.

குறித்த சத்தியத்தினை மீளப்பெற விரும்பும் நபர் ஒருவர் உடனடியாகவே,

'ஆணை விட்டன்'
'ஆணை விட்டன்'
'ஆணை விட்டன்' [27]

என மூன்றுமுறை உச்சரிப்பதன் மூலம் குறித்த சத்தியத்திலிருந்து விலக்குப் பெறலாம். இது ஒருவகையான மீளப் பெறுதலாகும். பிறிதொரு வகையாகத் 'துப்பிக் கழித்தல்' காணப்படுகிறது. 'தூ', 'தூ', 'தூ' என மூன்று முறை எச்சிலைத் துப்பிக் கழித்தல் செய்வதன் மூலமும் சத்தியத்தினைச் சிலர் விலக்கிக் கொள்கின்றனர்.

தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் பிறர் முன்னிலையில் பொய்ச்சத்தியத்தினைச் செய்ய முற்படுவோர் 'சத்தியம்' என்ற சொல்லை உச்சரிக்கும் முன்பாக 'அ' என்ற உயிர் எழுத்தை மனதில் உச்சரித்து சத்தியத்தினை 'அசத்தியம்' ஆக்கித் தப்பிக் கொள்கின்றனர். இங்கே 'அசத்தியம்' என்பது பொய்ச்சத்தியத்தினைக் குறிப்பதாக அமைகிறது. சத்தியத்தினைச் செய்யும் போதே 'பொய்ச்சத்தியம்' எனப் பிரமாணம் எடுப்பதால் தங்களுக்குப் பாதிப்பில்லை என இவர்கள் கருதுகின்றனர். அதனால் 'பொய்ச்சத்தியம் செய்து விட்டோமே' என்ற மனஉறுத்தல் இவர்களுக்கு இருப்பதில்லை. எனினும் இவ்வாறு சூழ்நிலைகருதிப் பொய்ச்சத்தியம் செய்வோர், தமது குலதெய்வங்களிடம் தமது நிலைப்பாட்டை விளக்கி 'மனஆறுதல்' பெறுவதனையும் பார்க்க முடிகிறது.

## 5. முடிவுரை

யாழ்ப்பாணத் தமிழரிடையே சத்தியம் செய்தல் குறித்த நம்பிக்கை வழக்கம் மிகப்பரவலாக உள்ளதனைக் கள ஆய்வுத்தரவுகள் நிரூபிக்கின்றன.

ஒருவரது உறுதியை அல்லது உண்மைத் தன்மையை நிலைநாட்டச் சத்தியம் செய்வதே இன்று பெருவழக்கான 'அளவுகோலாக' உள்ளமை தெரியவருகிறது.

படித்தவர், ஓரளவு படித்தவர், பாமரர் என்ற வேறுபாட்டு எல்லைகளை எல்லாம் தாண்டி, சமுதாயத்தின் அனைத்துத் தரப்பினரிடையேயும் சத்தியம் செய்தல் குறித்த நம்பிக்கை வழக்கத்தினைப் பரவலாகப் பார்க்க முடிகிறது.

கடவுளின் மேல் சத்தியம் செய்தல். தாயின் மேல் சத்தியம் செய்தல், பிள்ளையைத் தாண்டிச் சத்தியம் செய்தல் முதலானவை சத்தியத்தின் வலிமையினை வெளிக்காட்டுவனவாக உள்ளன. பிள்ளையைத் தாண்டிச் சத்தியம் செய்யும் நம்பிக்கை வழக்கம் பெரிதும் நாட்டுப்புறப் பக்கங்களிலேயே வழக்கிலிருந்து வருகின்றது.

தொழில்மேல் உள்ள ஆபத்துக்களை வரவழைத்து குறித்த தொழில் உபகரணங்களின் மேல் சத்தியம் செய்வதான நடைமுறை சத்தியத்தின் உண்மைத் தன்மையின் 'உரைகல்லாக' அமைந்துள்ளது.

சமுதாயத்தின் சட்டம் ஒழுங்கு மற்றும் தனிநபர் ஒழுகலாறுகள் முதலான பல்வேறு

விடயங்களில் மனிதனை நெறிப்படுத்துவதில் சத்தியத்தின் பங்களிப்பு அபரிதமாக உள்ளது. சமூகஉறுப்பினரில் பெரும்பாலானோர் சத்தியத்துக்குக் கட்டுப்பட்டவர்களாகவே இன்றும் காணப்படுகின்றனர். ஆயினும் கல்வி முன்னேற்றம், பிறநாட்டுத் தொடர்பு, நாகரிக வளர்ச்சி, இடையறாத போர் தந்த அழிவுகளின் காரணமாக வாழ்வில் ஏற்பட்ட வெறுமை அல்லது பிடிப்பின்மை, எப்படியும் வாழலாம் என்கின்ற கருத்து நிலையின் செல்வாக்கு முதலானவை காரணமாகச் சத்தியம் செய்தலில் காணப்படுகின்ற நம்பிக்கையில் ஒருவித தளர்ச்சிப் போக்கையும் ஆய்வுப்பிரதேச மக்களிடையே இனங்காண முடிகிறது என்பதையும் இவ்விடத்தில் குறிப்பிடல் வேண்டும்.

## அடிக்குறிப்புக்கள்

1. முத்தையா. ஆத ;பாகனேரி நாட்டு மக்களின் மரபும் பண்பாடும், ஆனந்தாயி பதிப்பகம், தஞ்சாவூர், 1998, ப.193
2. பரிபாடல், 6 : 94 – 95 அகநானூறு, 110:4–5, 266: 20–21, 296:7–8, கலித்தொகை, 98: 32–33
3. தகவல், ஆறுமுகம் பொன்னையா, ஆண், வயது 70, நயினாதீவு வடக்கு, நயினாதீவு. சந்தித்த திகதி, 6.2.2004
4. ஆய்வுப் பிரதேசங்களில் இவ்வித மனோபாவம் பரவலாகக் காணப்படு கின்றது. சிறு தெய்வங்கள் 'காங்கை' கூடிய தெய்வங்களாகக் கருதப்படுகின்றன.
5. தகவல், கனகசபை ஐயம்பிள்ளை, ஆண், வயது 63, ஊரிக்காடு. தொண்டமனாறு, சந்தித்த திகதி, 1.2.2004.

   செல்வராசா தவமணி, பெண், வயது 70, மணல்தறை ஒழுங்கை, கந்தர்மடம். சந்தித்த திகதி, 2.2.2004.

   சண்முகம் குகனேசன், ஆண், வயது 36, வெள்ளாம் போக்கட்டி, கொடிகாமம். சந்தித்த திகதி, 3.2.2004.
6. சுகந்தி தனபாலசிங்கம், பெண், வயது 27, தெணியம்பை, வல்வெட்டித்துறை. சந்தித்த திகதி, 17.3.2004.
7. இச்சொற்றொடர்கள் ஆய்வுப் பிரதேசங்களின் பேச்சுமொழி வேறுபாடுகளுக் கேற்ப சிற் சில மாற்றங்களுடன் பயின்று வருகின்றன.
8. உமாசெல்லத்துரை, பெண், வயது 75. கனகம்புளியடிச் சந்தி, சரசாலை. சந்தித்த திகதி, 22.4.2004.
9. ஆய்வுப் பிரதேசங்களில் இம்மரபே பரவலாக வழக்கில் உள்ளது.
10. இளையதம்பி மகேஸ்வரன், ஆண், வயது 37. நயினாதீவு வடக்கு, நயினாதீவு. சந்தித்த திகதி, 11.3.2004.
11. கந்தசாமி ஐயன், ஆண், வயது 60, ஐயனார் கோவிலடி, எழுவைதீவு, சந்தித்த திகதி, 11.4.2004
13. வைதேகி கணநாதன், பெண், வயது 32. மணல்தறை ஒழுங்கை, கந்தர்மடம். சந்தித்த திகதி, 26.3.2004
14. அமிர்தலிங்கம் பௌநந்தி, ஆண், வயது 30, துன்னாலை மத்தி, கரவெட்டி. சந்தித்த திகதி, 24.2.2004.

15. மாதவிலக்குத்தீட்டுத்துணி, மற்றும் பெண்களின் உள்ளாடைகள் இவ்விடத்தில் சிறப்பாகக் குறிப்பிடக் கூடியன வாகும்.
16. Frazer T.D. The Golden Bough (The Magic art) Macmillan & Company London, 1955 Vol.I Part I. 54.
17. பரராசசிங்கம் உதயகுமார், ஆண், வயது 40, கொழும்புத்துறை வீதி, பாண்டியன் தாழ்வு. சந்தித்த திகதி, 20.4.2004.
18. அரியபுத்திரன் சிவஞானசீலன், ஆண், வயது 33, இடைக்காடு, சந்தித்த திகதி, 15.3.2004
19. பூலோகராஜா நகுலன், ஆண் வயது 32, மகாத்மா வீதி, நெல்லியடி, சந்தித்த திகதி, 12.4.2004.
தளையசிங்கம் ரவீந்திரன், ஆண், வயது 37, 'சொர்ணபுரி', கொக்குவில் கிழக்கு, கொக்குவில். சந்தித்த திகதி, 9.1.2004,
தம்பர் செல்லையா, ஆண், வயது 53, நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறை, சந்தித்த திகதி,6.4.2004
20. இவ்வாறு பொய்ச் சத்தியம் செய்தவர்கள் குற்ற உணர்வுடன் இருப்பதனைக் காணமுடிகிறது.
21. கந்தசாமி பூமிநாதன், ஆண், வயது 38, செல்வச்சந்நிதி, தொண்டமனாறு, சந்தித்த திகதி, 7.5.2004.
22. செல்வரெத்தினம் செல்வமோகன், ஆண், வயது 30, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். சந்தித்த திகதி, 3.3.2004.
23. வைரவநாதன் வயவநாதன், ஆண், வயது 60, வசாவிளான், சந்தித்த திகதி, 19.12.2003.
24. தம்பு கணநாதன், ஆண், வயது 65, மணல்தறை ஒழுங்கை, கந்தர்மடம், சந்தித்த திகதி, 17.02.2004.
25. ஜானகி தேவதாசன், பெண், வயது 32, 19/37 பிறவுண் வீதி, கந்தர்மடம். சந்தித்த திகதி, 11.4.2004.
26. ரஜனி நரேந்திரா, பெண் வயது 30, 'ராஜஸ்தான்', கொக்குவில் கிழக்கு, கொக்குவில். சந்தித்த திகதி, 9.4.2004.
27. வேலாயுதம் சிவகுமாரன், ஆண், வயது 40, அரியாலை கிழக்கு, அரியாலை. சந்தித்த திகதி, 5.4.2004.